எந்தத் துணை மின் நிலையமாக இருந்தாலும் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, நிதி நிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 406, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

406—

வீடுகள்

***35977—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் உள்ளிட்ட 4 பேரூராட்சிகள், 10-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள், பல்வேறு அரசு அலுவலகங்கள்*

செயல்படுகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகளிலிருந்து வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தினுடைய கடைசி பகுதிகளுக்குச் செல்லவேண்டுமென்றால், நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. இதனால், அந்தப் பகுதியிலுள்ள அரசு அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அரசுப் பணியாளர்களுக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசுப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டிக்கொடுத்தால், அந்தப் பகுதியில் 'பணியாற்றும் அரசுப் பணியாளர்களுக்கு மிகவும் பேருதவியாக இருக்கும். காவல் துறையில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கென அந்தப் பகுதியில் இப்பொழுது இருக்கின்ற குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. எனவே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகள், அந்தப் பகுதியிலுள்ள பணியாளர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பு ஒன்றிய பேரூராட்சிப் பகுதிதான். மாவட்டத் தலைநகரம் மற்றும் கோட்டத் தலைநகரப் பகுதிகளில் பணியாற்றுகின்ற அரசு ஊழியர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அரசு ஊழியர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் வீட்டு வசதி வாரியம்மூலம் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'வத்திராயிருப்பு ஒன்றியத்தில் பள்ளிகள், பேரூராட்சி அலுவலகம், ஒன்றிய அலுவலகம் உள்ளிட்டவை இருக்கின்றன; அரசு ஊழியர்கள் அதிகம் இருக்கிறார்கள்; அவர்கள் குடியிருப்பதற்கு வசதியாக 'வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும்' என்று கோருகிறார். தமிழ்நாட்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் தவிர, மற்ற இடங்களில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட குடியிருப்புகளில் 3,100 குடியிருப்புகளுக்குமேல் காலியாக இருக்கின்றன. காரணம், இன்றைக்கு வீடு கட்டுவதற்காக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்திக் கொடுக்கப்படுகிறது.

6-வது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி வாடகைக் படியும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அரசு ஊழியர்களும் வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு இணையாகத் தனியார் வீடுகளை நாடிச் செல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வத்திராயிருப்பு ஒன்றியத்தில் ஆய்வு செய்து, அவசியம் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கப்படவேண்டிய சூழ்நிலை இருந்தால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்குப் பரிசிலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்புப் பகுதி மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதியாகும். அங்குள்ள அரசுப் பணியாளர்கள் அரசுக் குடியிருப்புகளில் வசிப்பதற்கு விரும்புகிறார்கள். அரசே நிலத்தைக் கையகப்படுத்தி அந்தப் பகுதியில் அரசுமூலம் குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்கின்றபோது, அரசுப் பணியாளர்கள் குடியிருப்பதற்கும், தங்களுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்கும் ஏற்றதாக இருக்கும். மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியைப் பொறுத்தவரை அரசுக் குடியிருப்புகள் இல்லை. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தைத் தேர்வு செய்து, அந்தப் பகுதியில் அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.